ஏறத்தாழ 35 இலட்சம் ரூபாய் என்று போடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஒன்றை இந்த சட்ட மன்றத்திலே தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தற்போது தமிழ் நாட்டில் அனைத்து பாலங்களையும் கட்ட வேண்டும் என்று சட்ட மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவுக்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறைக்கு அதிகமாக நிதி ஒதுக்கித்தந்து இன்றைக்கு போர்க் கால அடிப்படையில் பாலங்களும் சாலைகளும் கட்டும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டுடிருக்கின்றன என்பதை பல்வேறு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே 5 ஆண்டுக்காலத்திலே செய்ய வேண்டிய பணிகளை ஒருஆண்டுக்காலத்திலேயே எடுத்துக் கொள்வது என்பது நடைமுறைக்கு முடியாத விஷயம். வருகிற ஆண்டிலேயிருந்து ஒவ்வொரு ஆண்டும் இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து அந்தந்தப் பகுதியினுடைய முக்கியத்துவம் கருதி அந்தச்சாலைகள், மற்றும் பாலங்கள் எடுத்துக் கொள்ளப் படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 72, திரு. எ.தா. பொன்னுவேலு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

72—

மருதையாற்றின் குறுக்கே பாலம்.

*9781—திரு. எ.தா. பொன்னுவேலு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வரகூர் தொகுதி ஆலத்தூர் ஒன்றியம் சாத்தனூர் இலுப்பைகுடி சாலையில் உள்ள மருதையாற்றின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 செப்டம்பர் 24]

திரு. எ. தா. பொன்னுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய ஒளி விளக்கு, ஏழை எளியவர்களுடைய இதய தெய்வம், நான் வணங்கும் மனித தெய்வமாகிய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே, பொற்கால ஆட்சியிலே, —தமிழகத்திலேயே பின் தங்கிய பகுதி என்றால் வரகூர் தொகுதிதான். அந்தப் பகுதி ஆதிதிராவிட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழுகிற பகுதி. அந்தப் பகுதியில் குறிப்பாக ஆலத்தூர் ஒன்றியத்திலே இருக்கிற அந்த மக்கள் குளத்தூருக்கும் இலுப்பைக் குடிக்கும் இடையிலே இருக்கிற சிறிய ஆற்றிலே அதிகமாக தண்ணீர் வருகிறபோதெல்லாம் அவர்கள் நகரங்களுக்குச் செல்வதற்கு முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த ஆற்றின் மீது மேம்பாலம் அமைக்க அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலம் ஊராட்சி ஒன்றிய சாலையில் இருக்கிறது. ஊராட்சி ஒன்றிய சாலைகளிலே மிகப் பெரிய திட்டங்களைப் போட்டு பாலங்களைக் கட்டுவது என்பது நடைமுறைக்கு முடியாத விஷயம். அப்படிப்பட்ட இடங்களில் நெடுஞ்சாலைத் துறை மூலம் பகுதி 2 திட்டத்தின் மூலமாக சில இடங்களை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து அந்தப் பகுதி மக்களுடைய குறைகளைப்போக்குகிற விதத்திலே இருக்கிற நிதி ஆதாரங்களைக் கருதி அடுத்த ஆண்டு இது குறித்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—15

திரு. எ. தா. பொன்னுவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வளர்ந்து வரும் நவநாகரிக காலக் கட்டத்திலே ஒரு சமுதாயத்தினுடைய பண்பாடு, மக்களுடைய நாகரீக வளர்ச்சி போன்றவைகளை சாலையினால்தான், போக்குவரத்து வசதியினால்தான் அவர்கள் கற்றுக் கொள்ள முடியும், பண்பாட்டை பின்பற்ற முடியும் என்ற நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவில் கூட, அந்த இடத்திற்கு நான் கொடி ஏற்றுவதற்கு செல்லும்போது காரை அந்தப் பக்கம் நிறுத்தி இறங்கி வந்து அங்கே மக்களுக்குச் சொற்பொழிவு ஆற்றினேன் என்பதையும் கடந்த கூட்டத் தொடரில் நான் பேசியிருக்கிறேன். ஆகவே தமிழக விடிவெள்ளியாக விளங்குகின்ற, இல்லை என வாரி வழங்கும் வள்ளல் வரிசையில் வருகின்ற நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் மக்கள் நலம் பெற இந்த நிதியாண்டிலாவது அந்தச் சாலையை சீர்செய்து மேம்பாலம் அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியில் உள்ள

மக்கள் வாழ்வார்கள், ஆகவே இந்த நிதியாண்டிலேயே மேம்பாலம் அமைக்க ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே இந்த அரசு நெடுஞ்சாலைத் துறைக்கும் சரி, கிராமச்சாலைகள் துறைக்கும் சரி, மற்ற பல்வேறு துறைகளுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்து படிப்படியாக காரியங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய தொகுதிக்கு பாலம் வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அதிலே இந்த அரசுக்கு மிகவும் சந்தோஷம். இருந்தாலும் இந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலை. இது கிராமச் சாலையாகத்தான் இருக்கிறது. அந்தப் பகுதியினுடைய தேவையைக் கருதி நான் ஏற்கெனவே சொன்னதைப்போல உரிய அதிகாரிகளை அனுப்பி அப்படி ஒரு பிரச்சினை இருக்குமானால் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ அதை எடுத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 73, திரு. ஆ. செல்லத்துரை, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

73—

தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*10167—திரு. ஆ. செல்லத்துரை :
மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சாத்தான்குளம், உடன்குடி, தாமிரபரணி ஆற்றுக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

(ஆ) ஆய்வுப் பணிகள் நிறைவுற்று, திட்ட மதிப்பீடு இறுதியாக்கப்பட்டு, தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதலுடன் அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் திட்டப் பணிகள் செயலாக்கத்திற்காக எடுத்துக்கொள்ளப்படும்.